மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 128/2017

பெயர் : வசந்தாமணி
சாட்சி – பி.வா.சா–2 நாள்: 10.03.2026

---

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

1. நான் 11ம் பிரதிவாதி பழனிச்சாமியின் மனைவி என்றால் சரிதான். எனது கணவர் நல்ல உடல் நலத்துடன் உள்ளார் என்றால் சரிதான். 2, 3 வாதிகள் இருவரும் காலம் சென்ற பழனியம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். பழனியம்மாள் இந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் நான் சொன்னதன் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது.

2. பேச்சியம்மாளுக்கு யார் யார் வாரிசுகள் என்று சொல்லி உள்ளேன் என்றால் பொன்னியம்மாள், பழனியம்மாள் என்கிற வீரம்மாள் மற்றும் நடராஜ் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். பேச்சியம்மாளின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எங்களிடம் இல்லை. எனது கொழுந்தனார் கோபால் என்பவரின் மகன் பன்னீர்செல்வம் என்பவரிடம் உள்ளது. நான் அந்த வாரிசு சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் இல்லை அவர் தான் தன்னிடம் உள்ளதாக சொன்னார்.

3. ராமராஜிற்கு புஷ்பா என்ற முதல் மனைவி இருந்தது என்றும், அவர்களுக்கு 1 குழந்தை உள்ளது என்றும் சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு பற்றிய விவரங்களை என்னிடம் எனது கணவர் சொல்லியுள்ளார். ராமராஜன் முதல் மனைவி என்று சொல்லும் புஷ்பாவை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்த்துள்ளேன் அவர் தற்போது இறந்து விட்டார். புஷ்பாவின் குழந்தை தனத்தை நான் பார்த்துள்ளேன்.

4. புஷ்பாவின் குழந்தை தனத்திடம் ராமராஜன் 2வது மனைவி மற்றும் மக்கள் அவரை தவிர்த்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ள விவரத்தைப் பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன். புஷ்பாவின் குழந்தை தனம் தன்னையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று தற்போது வரை எந்த மனுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். பேச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை பொறுத்து பாகப்பிரிவினை பத்திரம் ஏதேனும் செய்து கொள்ளப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. பொன்னுச்சாமி என்பவர் எனது தகப்பனார் ஆவார். பொன்னுச்சாமியின் தாயார் பெயர் பொன்னியம்மாள் ஆகும். எனது தகப்பனார் பொன்னுச்சாமி 1992 ஆம் ஆண்டில் பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். 1992 ஆம் ஆண்டு பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணம் எழுதும்போதும் தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாமல் தான் இருந்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் எனது தகப்பனார் செக்குபந்திகள் குறிப்பிட்டு எனது மகள் பெயருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

6. எனது மகள் பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து பட்டா பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஏன் எனது மகள் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால், நாங்கள் இருக்கும் வரை எங்களுடன் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு மாற்றவில்லை. எனது கணவர் வழியில் அவருக்கு தாவா சொத்தில் நடராஜ் என்பவரின் வாரிசு என்ற அடிப்படையில் 15 ல் 1 பங்கு உரிமை உள்ளது என்று சொல்லி உள்ளதற்கு எதிர் வழக்குரையுடன் பாகம் பிரித்துக் கொடுக்க எதிர் கோருரிமை பாத்தியம் எதுவும் கோரியுள்ளாரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணம் நடைமுறைக்கு வராததால் தான் தற்போது வரை எனது மகள் பெயருக்கு பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

7. அம்சம்மாள் வகையறா யாருடைய வாரிசுகள் என்றால் பழனியம்மாள் என்கிற வீரம்மாள் என்பவரின் வாரிசுகள் ஆவார்கள். அம்சம்மாள் வகையறா சண்முகம் பெயருக்கு பி.வா.சா.ஆ.4 பொது அதிகார பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 பொது அதிகார பத்திரம் எழுதப்பட்ட 2005 ஆம் ஆண்டிலும் குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை ஆவணம் எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்திலும் செக்கு பந்தி குறிப்பிட்டுத்தான் பொது அதிகார பத்திரமாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. சண்முகம் பி.வா.சா.ஆ.4 பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில், பி.வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்தை மணிகண்டன் என்பவர் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சண்முகத்தின் மகன்தான் மணிகண்டன் என்றால்

சரிதான். பொதுவாக தந்தை மகனுக்கு சொத்து எழுதிக் கொடுப்பதாக இருந்தால் தான செட்டில்மெண்ட் தான் எழுதி கொடுப்பார்கள் என்றால் சரிதான். மற்றவர்கள் கேட்பார்கள் என்பதற்காக கிரைய பத்திரமாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

9. சண்முகத்திற்கு மணிகண்டன் தொகை கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்திலும் சண்முகம் செக்குப்பந்தி குறிப்பிட்டு தான் மணிகண்டனுக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது பெயரிலோ, எனது கணவர் பெயரிலோ தாவா சொத்திற்கு வரி எதுவும் செலுத்தப்படவில்லை என்றால் தற்போது எங்கள் பெயரில் தான் செலுத்தி வருகிறோம். எனக்கு தாவா சொத்தில் நேரடியாக எந்த உரிமையும் கிடையாது என்றால் எனது மகளுக்கு உள்ளது. எனது மாமனாருக்கும் உரிமை உள்ளது.

10. இறந்து போன ராமராஜ் அவரது மனைவியான 1ம் வாதி பெயருக்கு வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் கூட வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தை தெரியும் என்று குறிப்பிட்டு தான் தெரிவித்துள்ளேன் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனது கணவருக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு போட்ட பின்னர் தெரிந்து கொண்டார். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் கட்டுப்படுத்தாது என்று சொல்லும் எனது கணவர் மேற்படி ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்வதற்கு பரிகாரம் எதுவும் கோரியுள்ளாரா என்றால் இல்லை.

11. 1ம் வாதியின் கணவர் ராமராஜிற்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் எந்த உரிமையும் கிடையாது. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்திலேயே ராமராஜிற்கும் சொத்தில் பங்கு உள்ளது என்று தெரிவித்து, அதே போன்று எனது கணவருக்கும் 15 இல் 1 பாகம் உள்ளது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக ஒன்றாம் வாதி பழனியம்மாள் அறிவிப்பினை அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சொல்லியுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். மேற்படி அறிவிப்பிற்கு எனது கணவரும் சேர்ந்து பி.வா.சா.ஆ.18 பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.

12. பி.வா.சா.ஆ.18 பதில் அறிவிப்பில் ராமராஜுக்கு 15–ல் 1 பங்கு பாகம் உள்ளது என்று எனது கணவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. ராமராஜின் மூத்த தாரத்து வாரிசுகளின் பெயரில் சொத்து ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ராமராஜ் பழனியம்மாள் பெயருக்கு எழுதி வைத்துள்ள வா.சா.ஆ.2 செட்டில்மென்ட் ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றும், அதன்படி பழனியம்மாளுக்கு தாவா சொத்தில் 15–ல் 1 பங்கு பாகம் உரிமை உள்ளது என்றும், பழனியம்மாளின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மக்களுக்கு மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் அதே உரிமை உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.10 17:12:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.